தினத்தந்தி





மயிலம்

# தமிழ் கலைக்கல்லூரியில் பட்டமளிப்பு விழா

மயிலம், செப்.22–

மயிலம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 81, 82–வது பட்டமளிப்பு விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது: இதற்கு மயிலம் பொம்மபுர ஆதீனம் 20–ம் பட்டம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் தலைமை தாங்கினார். கல்லூரி செயலாளர் கேப்டன் ராஜூசிவ்குமார் ராஜேந்திரன் முன்னிலை வகித்தார். முதல்வர் திருநாவுக்கரசு வரவேற்றார். இதில் அண்ணாமலை பல்கலைக்கழக பதிவாளர் பேராசிரியர் சிங்காரவேல் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு மொத்தம் 515 மாணவ, மாணவிகளுக்கு பட்டங்கள் வழங்கி வாழ்த்தினார். விழாவில் பொம்மையார்பாளையம் சித்தர் சிவஞானி கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் அனுராதா, முன்னாள் முதல்வர் முருகசாமி, புதுவை கலைமாமணி புலவர் ஆதிகேசவன் மற்றும் துணை பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள், பெற்றோர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் பேராசிரியர் சிவசுப்பிரமணியம் நன்றி கூறினார்.